அலுவலகம், அரசியலமைப்புப் பேரவை, பகிரங்க சேவை ஆணைக்குழு, தேர்தல் ஆணைக்குழு, தேசிய பொலிசு ஆணைக்குழு, அமைச்சரவைச் செயலாளரின் அலுவலகம்; அத்துடன்

(ஆ) கணக்காய்வாளர் தலைமையதிபதித் திணைக்களம்,

என்பன அரசாங்கத் திணைக்களங்களாகக் கருதப்படுதலாகாது.".

அரசியலமைப்பின் IX ஆம் அத்தியாயத்தை மாற்றீடு செய்தல்.

4. அரசியலமைப்பின் IX ஆம் அத்தியாயம் இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் அத்தியாயம் இடப்படுகின்றது :—

## "அத்தியாயம் IX

### நிறைவேற்றுத்துறை

### பகிரங்க சேவை

பகிரங்க சேவை ஆணைக்குழு.

54. (1) இவ்வத்தியாயத்தில் "ஆணைக்குழு" எனக் குறிப்பீடுசெய்யப்படுவதான பகிரங்க சேவை ஆணைக்குழுவொன்றிருத்தல் வேண்டும்; அது அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின்மீது சனாதிபதியினால் நியமிக்கப்படும் ஒன்பது உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும். அத்தகைய உறுப்பினர்களுள் மூன்று உறுப்பினர்களுக்குக் குறையாதோர் பகிரங்க அலுவலராகப் பதினைந்தாண்டுகளுக்கு மேற்பட்ட அனுபவத்தை உடையவர்களாயிருத்தல் வேண்டும். சனாதிபதி, அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின்மீது உறுப்பினரொருவரை அதன் தவிசாளராக நியமித்தல் வேண்டும்.

(2) ஆளெவரும், அவர் பாராளுமன்றத்தின், ஒரு மாகாண சபையின் அல்லது ஓர் உள்ளூரதிகாரசபையின் உறுப்பினரொருவராகவிருப்பின் அல்லது வருவாராயின் ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுதலோ அல்லது அத்தகைய உறுப்பினரொருவராகத் தொடர்ந்து பதவி வகித்தலோ ஆகாது.